# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/39 - 2023 දෙසැම්බර් මස 20 වැනි බදාදා - 2023.12.20

*2363/39 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

CH/O/1632

***1974 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, 1976 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 1977 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1980 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க, வீட்டு ஆதன உச்சவரம்பு திருத்தச் சட்டங்கள் மூலமும் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் திருத்தம் செய்யப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்பு தொடர்பான சட்டம்***

*17அ(1) ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கும் கட்டளை*

மேலே குறிப்பிட்டவாறு திருத்தம் செய்யப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் 17அ(1) ஆம் பிரிவின் ஊடாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தேசிய வீடமைப்பு ஆணையாளர் காமினி பெரேரா ஆகிய நான், கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் எழுத்துமூல அனுமதியுடன் இதனுடன் அட்டவணையில் விபரித்துள்ள காணித்துண்டுகளின் உரிமையினை இதன் மூலம் கைப்பற்றுவதுடன், அந்தக் காணித்துண்டுகள் முன்னொருபோதும் எனக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை எனக் கவனத்திற்கொள்வதாகவும் மேலும் உறுதியளிக்கின்றேன்.

சிரேட்ட சட்டத்தரணி **காமினி பெரேரா**,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
2 ஆம் மாடி, 'செத்சிறிபாய',
பத்தரமுல்ல,
2023, திசெம்பர் 15.

### *அட்டவணை 1*

*மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர எல்லையினுள் மட்டக்குளி இலக்கம் 1 உடைய பிரிவினுள் மட்டக்குளி, விஸ்வயிக் வீதியில் அமைந்துள்ள வரி இலக்கம் 106, 108, 110, 112, 106/8 முதல் 106/10 வரையிலான ஆதனங்களுக்கு உத்தரவாதம் பெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. ஆர். டயஸ் அபேகுணவர்தன அவர்களினால் 1994.12.16 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 3990 உடைய நிலவரைபடத்தின் இலக்கம் 7B உடைய காணித்துண்டிற்குரிய எல்லைகள்-*

- *வடக்கு : விஸ்வயிக் வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 116 உடைய ஆதனங்களும் ;*
- *கிழக்கு : சென். மேரி வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 32 உடைய ஆதனமும் ;*
- *தெற்கு : சென். மேரி வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 98 உடைய ஆதனமும் ;*
- *மேற்கு : இலக்கம் 3999 உடைய நிலவரைபடத்தின் இலக்கம் 7A உடைய காணித்துண்டும்*

*ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள சைபர் ஏக்கர் சைபர் றூட் பதினைந்து தசம் ஆறு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.69பே.) எனும் சைபர் தசம் சைபர் மூன்று ஒன்பது ஆறு ஒன்பது (0.03969) ஹெக்டெயார் விசாலமான காணி மற்றும் அதற்குரிய கட்டிடங்கள், மரம்செடிகள், பழ வகைகள் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும்.*

### *அட்டவணை 2*

*மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர எல்லையினுள் மட்டக்குளி இலக்கம் 1 உடைய பிரிவினுள் மட்டக்குளி, விஸ்வயிக் வீதியில் அமைந்துள்ள வரி இலக்கம் 106, 108, 110, 112, 106/8 முதல் 106/10 வரையிலான ஆதனங்களுக்கு உத்தரவாதம் பெற்ற நிலஅளவையாளர் திரு. எல். எஸ். பி. பெர்னாந்து அவர்களினால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட 1976.10.20 ஆந் திகதிய 453 ஆம் இலக்கம் உடைய நிலவரைபடத்தின் இலக்கம் 7 உடைய காணித்துண்டிற்குரிய எல்லைகள்-*

- *வடக்கு : விஸ்வயிக் வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 116 உடைய ஆதனங்களும், இலக்கம் 1, 4, 5 மற்றும் 6 ஆகிய காணித்துண்டுகளும் ;*
- *கிழக்கு : சென். மேரி வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 32இ மட்டக்குளி மத்திய வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 75 உடைய ஆதனங்களும், இலக்கம் 5 மற்றும் 6 ஆகிய காணித்துண்டுகளும் ;*
- *தெற்கு : விஸ்வயிக் வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 98 உடைய ஆதனங்களும், இலக்கம் 1, 2, 4, 5 மற்றும் 6 ஆகிய காணித்துண்டுகளும் ;*
- *மேற்கு : விஸ்வயிக் வீதியும், இலக்கம் 1 முதல் 6 வரையான காணித்துண்டுகளும்*

*ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள சைபர் ஏக்கர் சைபர் றூட் முப்பத்தாறு தசம் மூன்று ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 36.39பே.) எனும் சைபர் தசம் சைபர் ஒன்பது இரண்டு சைபர் ஆறு (0.09206) ஹெக்டெயார் விசாலமான காணி மற்றும் அதற்குரிய கட்டிடங்கள், மரம்செடிகள், பழ வகைகள் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும்.*

EOG *12-0299*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*